கள்ளக்குறிச்சி அருகே துணிகரம்:

வீட்டின் பூட்டை உடைத்து ரூ.25 லட்சம் நகை கொள்ளை!

மர்ம நபர்களுக்கு போலீஸ் வலைவீச்சு!!

கள்ளக்குறிச்சி, ஜூலை.11–

கள்ளக்குறிச்சி அருகே கச்சிராயபாளையத்தில் வீட்டின்பூட்டைஉடைத்து ரூ.25 லட்சம் மதிப்புள்ள நகை மற்றும் வெள்ளி பொருட்களை மர்ம ஆசாமிகள் கொள்ளையடித்து சென்றனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் கச்சிராயபாளையம் வேதகாரதெருவை சேர்ந்த வர்ரமேஷ்(66). இவருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். இருவரும் சென்னையில் வேலை பார்த்து வருகின்றனர். கடந்த 6ம் தேதி வீட்டை பூட்டி விட்டு, ரமேஷ் தனது மனைவி ஜமுனாராணியு டன் சென்னையில் இருக்கும் தனது மகன்களை பார்க்க சென்றிருந்தார். பின்னர் ரமேஷ் மட் டும் சென்னையிலிருந்து புறப்பட்டு வீட்டிற்கு வந்துள்ளார். அப்போதுவீட்டின்முன்பக்கம் உள்ள இரும்பு கதவு பூட்டு உடைக்கப்பட்ட நிலையில் இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

வீட்டின் உள்ளே சென்று பார்த்த போது வீட்டில் இரண்டு அறைகளில் பீரோவில் இருந்த மாங்காய் நெக்லஸ், அம்மன் நெக்லஸ், அம்மன் ஆரம், கைசெயின், வளையல், கம்மல் என சுமார் ரூ 25 லட் சம் மதிப்புள்ள 20 பவுன் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டது தெரிய வந்தது. வீட்டில் யாருமில்லாததை நோட் டமிட்டு மர்ம ஆசாமிகள் வீட்டின் முன்பக்க கதவின் பூட்டை உடைத்து உள்ளே புகுந்து நகைகளை திருடி சென்றுள்ளனர்.

இது குறித்து ரமேஷ் கச்சிராயபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்தார். அதன் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். மேலும் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷானாஸ் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு குற்றவாளிகளை விரைந்து பிடிக்க உத்தரவிட்டார்.

இதையடுத்து கச்சிராயபாளையம் காவல் ஆய்வாளர் ஆனந்தராஜ் தலைமையில்தனிப்படைஅமைத்து அந்தப் பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகள், நகை கொள்ளை நடந்த வீட்டில் இருந்த கைரேகை பதிவுகளை சேகரித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

கள்ளக்குறிச்சியில்

காரில் ரூ.2 லட்சம் திருட்டு!

கள்ளக்குறிச்சி, ஜூலை.11–

கள்ளக்குறிச்சியில் காரில் வைத்திருந்த 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் அபேஸ் செய்யப்பட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் அருகே ஈய்யனூர் கிராமத்தைச் சேர்ந்தவர் முத்துசாமி மகன் செந்தில்குமார் (45) கார்டிரைவர் இவர்கள்ளக்குறிச்சியில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட ஒரு வங்கியில் தனது வங்கி கணக்கில் இருந்து 2 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் எடுத்துள்ளார் பின்னர் அந்த பணத்தில் ரூபாய் ஐயாயிரத்தை மட்டும் தனது சட்டைப் பையில் வைத்துள்ளார் மீதயிருந்த 2 லட்சத்து 10 ஆயிரம் பணத்தை ஒரு பையில் சுற்றி தனது காரில் உன் முன் பக்கத்தில் வைத்துள்ளார். அவர் தனது காரை கள்ளக்குறிச்சி சேலம் மெயின் ரோடு பகுதியில் உள்ள எலக்ட்ரிக்கல் கடை முன் நிறுத்திவிட்டு தனது வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கியுள்ளார் பின்னர் தனது காரை திறந்து பார்த்தபோது அதில் வைத்திருந்த ரூ.2 லட்சத்து 10 ஆயிரம் பணத்தை காணவில்லை இதனால் அதிர்ச்சி அடைந்தார். அவர் வங்கியில் இருந்து பணம் எடுத்து வந்து காரில் வைத்ததை நோட்டமிட்ட மர்ம நபர்கள் அந்த காரை பின்தொடர்ந்து வந்து காரை நிறுத்திவிட்டு எலக்ட்ரிகல் கடைக்கு சென்றபிறகு கார் கதவை திறந்து கைவரிசை காட்டியிருப்பது தெரியவந்தது. இதுகுறித்து செந்தில்குமார் கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து வங்கி பகுதி மற்றும் சேலம் மெயின் ரோடு கடை பகுதியில் கார் நிறுத்தப்பட்டிருந்த பகுதிகளில் சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நாமக்கல் பகுதியில்

காரிப் பருவ பயிர்களுக்கு விவசாயிகள் காப்பீடு செய்யலாம்!

வேளாண் அதிகாரி தகவல்!!

நாமக்கல், ஜூலை 11–

நாமக்கல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்சு.கவிதா., வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

நாமக்கல் வட்டாரத்தில் காரிப் பருவத்தில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ள சோளம் மக்காச்சோளம், நிலக்கடலை, பருத்தி ஆகிய பயிர்களுக்கு விவசாயிகள் காப்பீடு செய்திடலாம். இத்திட்டத்தில் நிலக்கடலை பிரிமியத்தொகை ஏக்கர் ஒன்றிற்கு ரூ.446.58 சோள பயிருக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ,184.15 வரும் 17.08.2026 ம் தேதிக்குள்ளும், பருத்தி பயிருக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.563.38, மக்காசோள பயிருக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.654.06 ஐ வரும் 16.09.2026 ம் தேதிக்குள்ளும் பிரிமியம் செலுத்தலாம். கடன் பெறும் விவசாயிகள் தொடக்க வேளாண்மை, கூட்டுறவு கடன் சங்கங்கள், தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகள், இசேவை மையங்கள் மற்றும் தேசிய பயிர் காப்பீட்டு இணையதளத்தில் உள்ள விவசாயிகள் கார்னரில் நிர்ணயக்கப்பட்ட காலகெடுவிற்குள் காப்பீடு செய்யலாம். இத்திட்டம் குறித்து கூடுதல் விவரங்களுக்கு பயிர் காப்பீடு இணையதள முகவரி அல்லது அருகே உள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயன் பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஊத்தங்கரை அருகே

ஊராட்சி ஏரிகளுக்கு பாசன வாய்க்கால் அமைத்து தர கோரிக்கை!

ஊத்தங்கரை ஜூலை:11

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அருகே உள்ள மூன்றம்பட்டி ஊராட்சியில் 16 ஏரிகள் உள்ளன ,கடும் வறட்சி காரணமாக அனைத்து ஏரிகளும் வறண்டு நீர் ஆதாரமின்றி கிடக்கிறது. மூன்றம் பட்டி ஊராட்சியில் பாப்பான் ஏரி ,நடு ஏரி ,காவலான் ஏரி ,சேவான் குட்டைகுண்டல் குட்டை ஏரி,தசப்பன் நாய்க்கன்ஏரி , ஓவிலான் குட்டை ஏரி,தொப்பை ராமன் ஏரி உள்ளிட்ட 16 ஏரிகள் உள்ளன. சிங்காரப் பேட்டை அருகே கடப்பாறை ஆற்றின் குறுக்கே மூன்றரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. இதில் இருந்து பொதுப்பணித் துறை க்கு சொந்தமான புளியானூர் ஏரிக்கு தண்ணீர் கிடைக்க திட்ட பணிகள் முடிவடைந்துள்ளது ,புளியானூர் ஏரியிலிருந்து உபரிநீர்மூன்றம்பட்டியில் உள்ள ஏரிகளுக்கு பாசன கால்வாய்கள் அமைக்க வேண்டும். மழைக்காலங்களில் இந்த நீர் விவசாயத் திற்கு பேருதவியாக இருக்கும். இதேபோல் சிங்காரப்பேட்டை மிட்டப்பள்ளி நடுப்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கும் புளியானூர் ஏரி நீராதரமாகும். எனவே ஏரிகளுக்கு நீர் வரத்து கால்வாய்கள் அமைக்க வேண்டும்எனபொதுமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்,

தர்மபுரி மாவட்டம் அரூர் அம்பேத்கர் நகரில் இறங்காட்டுமாரியம்மன் ஸ்ரீஊஞ்சல்மாரியம்மன் கோவில் தேர்திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தர்மபுரி மாவட்டம் பாலக்கோட்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ள மூன்று நாள் பயிற்சி வகுப்பு பாலக்கோடு டாக்டர் .எம்.ஜி.ஆர் அரசு கலைக் கல்லூரியில் பொறுப்பு அலுவலர் தாசில்தார் அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது.

பைக்கில் சென்ற ஆசிரியரை வழிமறித்து தாக்கிய யானை!

படுகாயத்துடன் உயிர் தப்பினார்!!

பென்னாகரம், ஜூலை.10–

தர்மபுரி மாவட்டம் ஏரியூர் அருகே உள்ளகாமராஜ் பேட்டையை சேர்ந்த சின்னமுத்து 39, என்பவர் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் உத்தனபள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் +1, +2 மாணவர்களுக்கு வேதியியல் பாட பிரிவு ஆசிரியராக, சுமார் இரண்டு மாதங்களாக அரசு ஆசிரியர்களாக பணிபுரிந்து வருகிறார்

இவர் நேற்று பள்ளி வேலையை முடித்து பேருந்து மூலமாக பென்னாகரம் வந்து அங்கு இருந்து இரவு 11 மணிக்கு ஏரியூர் செல்லும் சாலையில் தனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது சந்தைப்பேட்டை என்னும் இடத்தில், ஒற்றை யானை ரோட்டின் நடுவில் நின்றிருப்பதை கண்டு இருசக்கர வாகனத்தை நிறுத்தி உள்ளார்.

லைட் வெளிச்சத்தைக் கண்டு யானை அவரை துரத்த சின்ன முத்து, இருசக்கர வாகனத்தில் இருந்து இறங்கி ஓடும் போது யானை கீழே தள்ளி தனது துதிக்கையால் அழுத்தி முட்புதரில் தூக்கி வீசியதில் சின்னமுத்து படுகாயமடைந்து அலறினார்.

அந்த சத்தம் கேட்டு அக்கம் பக்கம் இருந்தவர்கள் வந்து பார்த்ததில் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த அவரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலமாக பென்னாகரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு அப்பகுதியில்பெரும்பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

பாலக்கோட்டில்

மக்கள் தொகை கணக்கெடுப்பு 3 நாள் பயிற்சி வகுப்பு!

பாலக்கோடு.ஜூலை.11–

தர்மபுரி மாவட்டம் பாலக்கோட்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ள மூன்று நாள் பயிற்சி வகுப்பு பாலக்கோடு டாக்டர் .எம்.ஜி.ஆர் அரசு கலைக் கல்லூரியில் பொறுப்பு அலுவலர் தாசில்தார்அசோக்குமார்தலைமையில் நடைபெற்றது.

இரண்டு கட்டமாக நடைபெற உள்ள

மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில், முதல் கட்டமாக ஆகஸ்டு 1 முதல் 31 ம் தேதி வரையும், இரண்டாம் கட்ட பணி பிப்ரவரி மாதம் நடக்க உள்ளது.

முதல் கட்ட பணியில் வீடுகள் குறித்த கணக்கெடுப்பும், இரண்டாம் கட்ட பணியில் சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பும் நடத்தப்பட உள்ளது.

இந்த கணக்கடுப்பு முழுவதும் மொபைல் ஆப், ஆன்லைன் மூலம் பதிவு செய்யப்படுவதால் காகித பணிகள்முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது.

இதில் பொதுமக்களிடமிருந்து 36 வகையான கேள்விகள் கேட்கப்பட்டு அதன் அடிப்படையில் கணக்கெடுக்கும் பணி நிறைவு செய்யப்படும் இதற்கான பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான 3 நாள்பயிற்சியில் களபயிற்சியாளர்கள் அரசு கல்லூரி உதவி பேராசிரியர்கள் செந்தில்குமார், சஞ்சிவராயன், முதுகலை பட்டதாரி ஆசிரியர் கஸ்தூரிகவிதா ஆகியோர் பயிற்சியினை வழங்கினர்.

மேலும் பயிற்சியில் கணக்கெடுப்பின்போது பொதுமக்களிடம் நடந்து கொள்ளும் முறைகள் அவரிடம் கேட்கப்பட வேண்டிய கேள்விகள் அது பதிவு செய்யும் முறை குறித்து விளக்கி கூறினார்.

இந்த பயிற்சி வகுப்பில் பாலக்கோடு வட்டத்திற்க்குட்பட்ட 69 வருவாய் கிராமங்களை சேர்ந்த வருவாய் துறை ஊழியர்கள், 100 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரிமாவட்டகலெக்டர்அலுவலகம்முன்பு,அங்கன்வாடிஊழியர்கள்மற்றும்உதவியாளர் சங்கத்தின் சார்பில், அங்கன்வாடி திட்டத்தை தனியார் மயமாக்குவதை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் தேவி தலைமை தாங்கினார்.

மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்!

கிருஷ்ணகிரி கலெக்டர் வேண்டுகோள்!!

கிருஷ்ணகிரி,ஜூலை.11–

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என கலெக்டர் ச.தினேஷ் குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு முதல் பணியான வீட்டுப் பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு வருகிற ஆகஸ்ட் 1ம் தேதி முதல் 30ம் தேதி வரை 30 நாட்களுக்கு மேற்கொள்ளப்படவுள்ளது.

மக்கள்தொகைசுயகணக்கெடுப்பு வருகிற 17ம் தேதி முதல் 31ம் தேதி வரை மேற்கொள்ளப்பட உள்ளது. இதில் சுயக் கணக்கொடுப்பு முறையில் பொதுமக்கள் தங்களது குடும்ப விவரங்களைதாங்களே https://se.census.gov.in இணைய வழியில் பதிவு செய்து கொள்ளலாம்.

இதன் மூலம் தங்களது குடும்ப விவரங்களை முன்கூட்டியே எளிதாகவும், பாதுகாப்பாகவும் பதிவு செய்து எஸ்.இ ஐ.டி யை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், வருகிற ஆகஸ்ட் மாதம் 1ம் தேதி முதல் மாவட்டம் முழுவதும் வீடு தோறும் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் அரசு வழங்கிய அடையாள அட்டையுடன் வீடுதோறும் வருகைதந்து விவரங்களை சேகரிப்பார்கள்.

எனவே, அலுவலர்களுக்கு சரியானமற்றும் முழுமையானதகவல்களை வழங்கி, மக்கள்தொகை

கணக்கெடுப்பு 2027 பணிகள் வெற்றிகரமாக நடைபெற முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இதுதொடர்பாகசந்தேகங்களைகலெக்டர் அலுவலகத்தில் 24 x 7 செயல்படும் கட்டுப்பாட்டு அறையின் கட்டணமில்லா தொலைபேசி எண் 1077, 04343 23444 உள்ளிட்ட எண்களில் தொடர்புக் கொள்ளலாம்.

இதே போல் censuskrishnagiri@gmail.com மின்னஞ்சல் வழியாகவும் தொடர்புக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்ட

போலீஸ் சூப்பிரண்டுக்கான சட்ட ஆலோசகர் பதவி!

விண்ணப்பிக்க அழைப்பு!!

கிருஷ்ணகிரி, ஜூலை.11–

கிருஷ்ணகிரி மாவட்ட மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அனிதாவுக்கு நீதிமன்ற பணிகள் மேற்கொள்ள சட்ட ஆலோசகர் பதவிக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். இது குறித்து மாவட்ட மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை: மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுக்க ளுக்கு நீதிமன்ற பணிகள் தொடர்பான பணிகள் மேற்கொள்ளவும், ஆலோசனை வழங்கவும் சட்ட ஆலோசகர் பதவி தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கிருஷ்ணகிரி மாவட்ட எஸ்.பி., அனிதாவுக்கு, நீதிமன்ற பணிகள் தொடர்பான சட்ட ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ள வர்கள் வரும், 20&ம் தேதிக்குள் தங்கள் விண்ணப்பங்களை காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், கிருஷ்ணகிரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.விண்ணப்பிக்கும் நபர்கள், தகுதி வாய்ந்த பல்கலைக்கழகம் மூலமாக பி.எல், அதற்கு நிகரான சட்டம் சம்மந்தப்பட்ட பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். குறைந்தது 5 ஆண்டுகள் உயர்நீதிமன்றம் அல்லது நீதிமன்றம் குறித்த பணிகள் மேற்கொண்டிருக்கவேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE OF HOSUR
O. S. No. 420/2025

The Federal Bank Limited,
Branch at Denkanikottai
Rep. by its Manager and Branch Head
..... Plaintiff
/Vs/
1. Mrs. Maramma
2. Mr. Basavaraj
Defendants

Defendant No. 2 Mr. Basavaraj, S/o. Mr. Basappa, aged about 34 years, Both are Residing at: No.2/23, Narasapuram, Pachapanatti Post, Bithreddi, Krishnagiri635 113.

SUIT SUMMONS TO DEFENDANT No. 2

Please take notice that the plaintiff above named have filed the above suit against recovery of money and the same is posted on 11.08.2026 for your appearance before the above court either in person or by pleader at 10.00 AM and state your side of statement if any, failing which the matter would be heard and pass an exparte order against you.

/By Order of the Court/
Advocate for Plaintiff
K. VELAYUDHAM, M.Sc. M.L
Advocate HOSUR- 635 109

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE OF HOSUR
O.S. No. 735/2025

Tamil Nadu Grama Bank,
(E PallavanGrama Bank),
Branch at Hosur,
Rep. by its Branch Manager
Plaintiff
/VS/
M/s. RDWET LOTUS Mahalir Sangam,
Rep by its AnimatorMrs. S. Anuradha
And its Representatives Mrs. V. Lakshmi, and Mrs.M.Shabana and others
Defendants

Defendant No.5 Mrs. N. Narayanamma, W/o.Mr.Narayanasami, aged about 55 years, Residing at: D.No.602, Kittappagutta, Hosur Taluk, Krishnagiri District635109
Defendant No.7 Mrs.V.Jothi, W/o.Mr.Magimaidas, aged about 50 years, Residing at: D. No: 592 Kittappakuttai, Avalapalli Road, Hosur Taluk, Krishnagiri District 635109. Ph:9894422690, 8903622697
Defendant No.8 Mrs.M. Shobha, W/o. Mr.Manjunath, aged about 32 years, Residing at: D.No:595, Kittappankuttai, Hosur Taluk, Krishnagiri District635109. Ph: 9677327072.
Defendant No.13 Mrs. S.Nandhini, W/o. Mr. Srinivasan, aged about 35 years, Residing at: 602, Kittappankuttai, Hosur Taluk, Krishnagiri District635109.
Defendants No. 5, 7, 8 and 13 all are Member of M/s. RDWET Lotus Mahalir Sangam
.....Defendants

SUIT SUMMONS TO DEFENDANTS No. 5, 7, 8 and 13

Please take notice that the plaintiff above named have filed the above suit against recovery of money and the same is posted on 17.08.2026 for your appearance before the above court either in person or by pleader at 10.00 AM and state your side of statement if any, failing which the matter would be heard and pass an exparte order against you.

/By Order of the Court/
Advocate for Plaintiff
K. VELAYUDHAM, M.Sc. M.L
Advocate HOBUR030 109

மேன்மைமிகு சார்பு நீதிமன்றம்
உளுந்தூர்பேட்டை
MCOP No. 112/2024

விஜயலட்சுமி
மனுதாரர்
எதிர்
சீனுவாசன் s/o ராமலிங்கபடையாச்சி எண் 14 பெருமாள் கோவில் தெரு
கோயம்பத்தூர் மாவட்டம்,
1-ம் எதிர்மனுதாரர்

1-ம் எதிர்மனுதாரருக்கு

தெரிவிப்பது என்னவென்றால்

மனுதாரர், 1-ம் எதிர்மனுதாரர் விபத்துநட்ட ஈடு வேண்டி மனு தாக்கல் செய்து மேற்படி மனுவானது சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி மனுவில் 1-ம் எதிர்மனுதாரரம் வரகின்ற 16.07.2026-ம் தேதி அன்று காலை 10 மணிக்கு தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவிக்கவேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கு சட்டப்படி தீர்மானிக்கப்படும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் அறியவும்.

சி.ஸ்ரீதரன் B.A.,LLB.,
வழக்கறிஞர் உளுந்தூர்பேட்டை

தனேஜா ஏரோஸ்பேஸ் அண்ட் ஏவியேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம் : பேலகொண்டபள்ளி கிராமம், தளி ரோடு, தேன்கனிக்கோட்டை, பேலகொண்டபள்ளி - 635 114, (தமிழ்நாடு)
போன் / பேக்ஸ் : 04347-233507, E-mail : secretarial@taal.co.in,
Website : www.taal.co.in, CIN : L62200TZ1988PLC014460

வீடியோ கான்பரன்சிங் (VC)/ மற்ற ஆடியோ விஷுவல் மீன்ஸ் (OAVM) மூலம் நடத்தப்படும் 37ஆம் ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு

தனேஜா ஏரோஸ்பேஸ் அண்ட் ஏவியேஷன் லிமிடெட்டின் 37வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) ஆகஸ்ட் 04, 2026, செவ்வாய்க்கிழமை அன்று மதியம் 12.00 மணிக்கு (இந்திய நேரப்படி) பங்குதாரர் வருடாந்திர பொதுக்கூட்டத்தை கூட்டுவதற்காக அனுப்பப்பட்ட அறிவிப்பில் (Notice) இடம்பெற்றுள்ள விஷயங்களை கருத வீடியோ கான்பரன்சிங் (VC) ஆடியோ வீஷுவல் மீன்ஸ் (OAVM) எனும் மின்னணு நுட்பங்களின் வாயிலாக நடைபெறும்.

நிறுவன விவகார அமைச்சகத்தின் 8 ஏப்ரல் 2020, 13 ஏப்ரல் 2020, 13 ஜனவரி 2021, 5 மே 2022, 28 டிசம்பர் 2022, 9 செப்டம்பர் 2023, 19 செப்டம்பர் 2024 மற்றும் 22 செப்டம்பர் 2025 ஆகிய தேதிகளில் வெளியான பொதுச் சுற்றறிக்கை எண்கள். 14/2020, 17/2020, 2/2021, 2/2022,10/2022, 09/2023, 09/2024 மற்றும் 03/2025 (ஒட்டுமொத்தமாக 'MCA சுற்றறிக்கைகள்' எனப்படுகிறது) மற்றும் சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 தேதி 12 மே 2020 உடன் படிக்கப்படும் SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 தேதி 15 ஜனவரி 2021, SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 தேதி 13 மே 2022, SEBI/HO/CFD/PoD-2/P/CIR/2023/4 தேதி 5 ஜனவரி 2023, SEBI/HO/CFD-PoD-2/P/CIR/2023/167 தேதி 7 அக்டோபர் 2023 மற்றும் SEBI/HO/CFD-PoD-2/P/CIR/2024/133 தேதி 3 அக்டோபர் 2024 வகையில் ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினவர்களின் இருப்பு இல்லாமல் 2020, 2021, 2022, 2023, 2024, 2025 செப்டம்பர் 30, 2026 வரை ஆண்டுகளுக்கான வருடாந்திர பொதுக்கூட்டங்கள் வீடியோ கான்பன்சிங்(VC)/ ஆடியோ வீஷுவல் மீன்ஸ் OAVM) முறையில் கூட்டப்பட்டது. நிறுவனங்கள் சட்டம் 2013 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் விதிமுறைகள்) 2015 ஆகியவற்றின் பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்க, சுற்றறிக்கைகள் மற்றும் சுற்றறிக்கைகளின் படி நிறுவனத்தின் 37வது வருடாந்திர பொதுக்கூட்டம் VC / OAVM மூலம் உறுப்பினர்களின் இருப்பு இல்லாமல் கூட்டப்படவுள்ளது.

மேலே உள்ள சுற்றறிக்கைகளுக்கு இணங்க 2025-26 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கையுடன் 37வது பொதுக்குழுவின் அறிவிப்பும், நிறுவனம் / டெபாசிட்டரிகள் / பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர், அதாவது பிக்ஷோர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றில் மின்னஞ்சல் முகவரிகள் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பபடும். உறுப்பினர்கள் VC/OAVM வசதி மூலம் பொதுக்குழுவில் பங்கேற்கலாம்.

அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை நிறுவனத்தின் இளைய தளமான www.taal.co.in மற்றும் மும்பை பங்கு சந்தையின் இணையதளம் www.bseindia.com மேலும் NSDLஇன் evotingindia.nsdl.com இணையதளத்திலும் கிடைக்கும். பொதுக்குழுக் கூட்டத்தின் போது தொலைமின் வாக்களிப்பு மற்றும் மின்னணு வாக்குப்பதிவை எளிதாக்குவதற்கு NSDL உடன் நிறுவனத்தால் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மற்றும் நிறுவனம் / டெபாசிட்டரிகளில் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாதவர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான பிக்ஷோர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்-ன் பதியப்பட்ட முகவரிகளுக்கு investor@bigshareonline.com அல்லது நிறுவனத்தின் secretarial@taal.co.in மூலம் பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கையை பெறலாம்.

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களின் மீது வாக்களிக்க அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும் தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதியை நிறுவனம் வழங்கும்.மேலும் பொதுக்குழுக் கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிப்பதற்கான விரிவான செயல்முறை அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

நிறுவன விவகாரங்கள் அமைச்சக MCA சுற்றறிக்கைகளுக்கு இணங்க நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களின் தகவல் மற்றும் நன்மைக்காக இந்த விளம்பரம் வெளியப்படுகிறது.

தனேஜா ஏரோஸ்பேஸ் அண்டு ஏவியேஷன் லிமிடெட் (ஒப்பம்)
அஸ்வினி நவரே
நிறுவன செயலாளர்

பூனே, 11 ஜூலை 2026

Edited, and Published by S. N. Selvam on behalf of M/s. Chennai Murasu Private Ltd, from No.K-1, SIDCO Industrial Estate, Omalur Main Road, 5 Roads, Salem – 636 004 and Printed by P.Senthil Azhagan at Salem Malai Murasu Achagam, K-1, SIDCO Industrial Estate, Omalur Main Road, 5 Roads, Salem –636 004. RNI Registration No. TNTAM/2016/75064.